# தூய லூர்து அன்னை ஆலயம்


50இ ஓபியர் சாலை, சிங்கப்பூர் 188690

தொலைபேசி: 6294 0624 – www.lourdes.sg

பங்குத்தந்தை: அருட்திரு மைக்கேல் சீத்தாராம்
frmichaelsitaram@gmail.com

உதவிப் பங்குத்தந்தை: அருட்திரு பால் இயோ
fryeopaul@gmail.com

உதவிப் பங்குத்தந்தை: அருட்திரு தே. நித்திய சகாயராஜ்
nithiya@catholic.org.sg

பங்கு அலுவலகம் : ololpastoral@gmail.com
ololsec@gmail.com


| | | |
|---|---|---|
| 29~10~2017 | பொதுக்காலம் 30ம் ஞாயிறு | முதல் ஆண்டு |



## விவிலியப் பகிர்வுக் குழு நற்கருணை ஆராதனை வழிபாடு

நாள்: 05-11-2017, ஞாயிறு

நேரம் : காலை 11:30 மணி

இடம் : புனித பெர்னதெத்து அறை

பங்கேற்று இறை ஆசீர் பெற உங்களை அன்புடன் அழைக்கிறோம்.

## நற்கருணை ஆராதனை வழிபாடு





நாள் : 05-11-2017, ஞாயிறு

நேரம் : மாலை 5:00 மணி

திவ்விய நற்கருணையில் வீற்றிருக்கும் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவுடன் ஒரு மணி நேரம் செலவிட்டு அவருடைய ஆசீரைப் பெறவும், நம் குடும்பங்களை ஒப்புக்கொடுக்கவும், குருக்களுக்காகவும், தேவ அழைத்தலுக்காக செபிக்கவும், உங்களை அன்புடன் அழைக்கிறோம்.

# சிந்தனை

அன்புடையீர்,

பொதுக்காலத்தின் 30ஆம் ஞாயிறுத் திருப்பலியில் பங்கேற்க வந்துள்ள இறைமக்கள் அனைவரையும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்போடு வரவேற்கிறோம்.

நமக்குத் தெரியாததைத் தெரிந்து கொள்ள கேட்கப்படும் கேள்விகள் நம் அறிவை வளர்க்கும். இதற்கு மாறாக, பதில்களைத் தெரிந்துகொண்டு, அடுத்தவருக்கு நம்மைவிட குறைவாகத் தெரிகிறதென்பதை இடித்துச் சொல்வதற்காக கேள்விகள் கேட்கும்போது, நமது பெருமை கலந்த அறியாமை அங்கு பறைசாற்றப்படும். தனக்குத் தெரியும் என்ற இறுமாப்பில் இயேசுவை அணுகி கேள்வி கேட்ட ஓர் அறிஞரைப் பற்றி இன்றைய நற்செய்தியில் நாம் வாசிக்கிறோம். தவறான, குதர்க்கமான எண்ணங்களுடன் திருச்சட்டநூல் அறிஞர் கேள்வி கேட்டாலும், அந்தக் கேள்வி மிக அழகான, ஆழமான கேள்வி என்பதை இயேசு உணர்ந்து, அதற்கு பதில் சொல்கிறார். இயேசு தந்த பதில், காலத்தால் அழியாத ஒரு பதில். திருச்சட்டங்களின் அடிப்படை நியதிகளைப் பற்றி கேள்விகள் கேட்டு, அறிவுப்பூர்வமான பதில்களை அறிந்து கொள்வது முக்கியமல்ல; அவைகளில் சொல்லப்பட்டிருக்கும் இறையன்பு, பிறரன்பு ஆகியவற்றைச் செயல்படுத்துவதே முக்கியம் என்பதை இயேசுவின் இந்தக் கூற்று தெளிவுப்படுத்துகிறது.

இன்றைய முதல் வாசகத்தில் நமது கடமைகளைப் பற்றி, நாம் ஆற்றவேண்டிய பணிகளைப் பற்றி இறைவன் இதற்கு மேலும் தெளிவாகச் சொல்ல முடியுமா என்று தெரியவில்லை. இரக்கம் நிறைந்த அந்த இறைவனின் வார்த்தைகள் நம் வாழ்வில் மாற்றங்களை உருவாக்குமா? இயேசு சொன்னதுபோல், இறையன்பையும், பிறரன்பையும் நாம் வாழ்வில் செயல்படுத்த முடியுமா? முயன்றால் முடியும். அதற்கு தேவையான அருளை வேண்டி இன்றைய திருப்பலியில் உளமாற மன்றாடுவோம்.வாரீர்!

## புனிதர் அனைவர் பெருவிழா திருப்பலி

**31 - 10 - 2017, செவ்வாய்**

ஆங்கிலம் : மாலை 6.30 மணி

**01 - 11 - 2017, புதன்**

ஆங்கிலம் : மதியம் 12.30 மணி
மற்றும் மாலை 6.30 மணி

தமிழ் : மாலை 8.00 மணி

## இறந்த விசுவாசிகள் அனைவரின் நினைவு நாள் திருப்பலி

**02 - 11 - 2017, வியாழன்**



ஆங்கிலம் : மதியம் 12.30 மணி
மற்றும் மாலை 6.30மணி

தமிழ் : மாலை 8.00 மணி

## விவிலியக் குறுக்கெழுத்து

கீழுள்ள வசனங்கள் இன்றைய வாசகங்களிலிருந்து எடுக்கப்பட்டவை. கோடிட்ட இடங்களுக்கான பதில்கள் இங்குள்ள கட்டங்களுக்குள் மறைந்து கிடக்கின்றன. அவை மேலிருந்து கீழாகவோ, கீழிருந்து மேலாகவோ, இடமிருந்து வலமாகவோ, வலமிருந்து இடமாகவோ, குறுக்காகவோ இருக்கலாம். இது சிறுவர்களுக்கு மட்டுமல்ல, மற்றவர்களும் முயற்சி செய்யலாம். கண்டுபிடிக்க முடியவில்லையென்றால் மீண்டும் ஒரு தடவை வாசகங்களைப் படித்து முயற்சி செய்யவும்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| க | வ | த | லை | சி | ற | ந் | த | லு | கு |
| லை | ட | ஆ | டை | றை | வ | வ | ஆ | பு | க் |
| க் | து | ம் | சு | பா | ய | ம் | து | சு | லு |
| பு | ன் | ர | பே | ற் | டா | ந் | பு | ண் | ர |
| ல் | வ | ளி | நே | க | ரு | து | ஸ் | நே | கு |
| லு | தை | ஒ | கோ | லி | அ | க | ண் | கோ | ழு |
| அ | டு | த் | தி | ரு | ப் | ப | வ | ர் | அ |
| டு | க | த் | ர் | ப் | ம | மு | தி | த் | லை |
| நா | ன | மா | ங் | வா | ண | வி | ரு | யு | யு |
| சி | க | ண் | க | மு | ம் | க | க் | ர | இ |

1. நான் அவர்கள் _________ச் செவிசாய்ப்பேன்.
2. ஏனெனில் நான் _________ உடையவர்.
3. ஆண்டவர் என் _________, என் கோட்டை, என் மீட்பர்.
4. என்றென்றும் _________ காட்டுபவரும் அவரே.
5. ஆண்டவருடைய _________ உங்கள் நடுவிலிருந்தே பரவியது.
6. அவரே வரப்போகும் _________ நம்மை மீட்பவர்.
7. இதுவே _________ முதன்மையான கட்டளை.
8. உனக்கு _________ மீதும் அன்பு கூர்வாயாக.

***********

அன்புமிக்கச் சகோதர சகோதரிகளே! நீங்கள் இருப்பது இறைவனின் இல்லம். எனவே, உங்கள் கைத் தொலைபேசியை அமைதி நிலையில் வைக்கும்படியும், ஆலயத்தின் உள்ளே உணவு உண்பதையும், பானங்கள் அருந்துவதையும் தவிர்க்கும்படியும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். நன்றி.

## ஞாயிறு வாசகங்கள்



முதல் வாசகம்: விடுதலைப் பயணம் 22:21-27

பதிலுரைப்பாடல்: திருப்பாடல் 18:1-2a.2bc-3.46,50

பதிலுரை: என் ஆற்றலாகிய ஆண்டவரே! உம்மிடம் நான் அன்பு கூர்கின்றேன்

இரண்டாம் வாசகம்: 1 தெசலோனிக்கர் 1:5C -10

வாழ்த்தொலி: அல்லேலூயா! அல்லேலூயா! என்மீது அன்பு கொண்டுள்ளவர் நான் சொல்வதைக் கடைப்பிடிப்பார். என் தந்தையும் அவர்மீது அன்பு கொள்வார். நாங்கள் அவரிடம் வந்து அவருடன் குடிகொள்வோம், என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

நற்செய்தி வாசகம்: மத்தேயு 22:34-40

## ஆலயத் திருப்பலி நேரங்கள்

| | |
|---|---|
| வார நாட்கள் (ஆங்கிலம்) | : மதியம் 12:30 & மாலை 6:30 மணி |
| முதல் வெள்ளி (ஆங்கிலம்) | : மாலை 7:30 மணி |
| சனி (ஆங்கிலம்) | : மாலை 6:00 & 7:30 மணி |
| ஞாயிறு (ஆங்கிலம்) | : காலை 7:30, 11:30 & 1:00 மணி |
| ஞாயிறு (தமிழ்) | : காலை 9:30 & மாலை 6:30 மணி |
| பொது விடுமுறை(ஆங்கிலம்) | : காலை 9:00 மணி |
| பொது விடுமுறை (தமிழ்) | : காலை 10:00 மணி |



## ஆலயத்தில் நடைபெறும் பக்தி முயற்சிகள்

| | | |
|---|---|---|
| ஆங்கிலம் | வார நாட்களில் செபமாலை | : மதியம் 11:55 மணி |
| | திங்கள் & புதன் செபமாலை | : மாலை 5:55 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை | : வெள்ளி மாலை 6:30 மணி தொடர்ந்து திருப்பலி |
| | தூய ஆவியின் கத்தோலிக்க அருங்கொடை | : வெள்ளி மாலை 7:45 மணி |
| தமிழ் | செபமாலையும் விவிலியப் பகிர்வும் | : ஞாயிறு காலை 11:30 மணி |
| | செபமாலை | : ஞாயிறு மாலை 6:00 மணி |
| | இறைவாழ்வு செபக்குழு வழிபாடு | : ஞாயிறு இரவு 9:00 மணி |
| | லூர்து அன்னை நவநாள் | : முதல் ஞாயிறு காலை 8:30 மணி |
| | சாட்சியக் கூடாரம் | : முதல் ஞாயிறு மதியம் 2:00 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை | : முதல் ஞாயிறு மாலை 5:30 மணி |
| | மரியாயின் சேனை | : செவ்வாய் மாலை 4:30 மணி |
| | குழந்தை இயேசு நவநாள் | : செவ்வாய் மாலை 4:30 மணி |
| | இறை இரக்கச் செபம் | : வெள்ளி மாலை 5:45 மணி |
| | இடைவிடா சகாய அன்னை நவநாள் மற்றும் செப வழிபாடு | : சனி மாலை 8:00 மணி |
| | புனித பியோ செப வழிபாடு | : மாதத்தின் 23ம் தேதி இரவு 8:30 மணி |

தூய லூர்து அன்னை சமூகக் கூடத்தின் கட்டுமானப் பணிக்காக மேற்கொள்ளப்பட்டு வரும் நிதிதிரட்டும் பணியை மறைமாவட்டமானது, தற்காலிகமாக நிறுத்திவைக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளது. எனவே மறு அறிவிப்பு கொடுக்கப்படும் வரை இவ்வசூல் நிறுத்தி வைக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

**உங்கள் கவனத்திற்கு** மறைமாவட்டம் மற்றும் பங்குத்தந்தையின் அனுமதியின்றி நம் பங்கு வளாகத்திலோ அல்லது உங்கள் வீட்டிலோ உங்களுக்காகச் செபிப்பதாகக் கூறிக்கொண்டு, நன்கொடை கேட்பவர்களை ஏற்க வேண்டாம். **ஆலயத்திற்கு நீங்கள் கொண்டு வரும் உங்கள் உடைமைகளுக்கு நீங்களே பொறுப்பு ஏற்க வேண்டும்.**